## (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**ஓ.எஸ்.எண்.106/2022** **நாள்.07.06.2024**

2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 07 நாள் பிரதிவாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாராயணசாமி | தொழில் | |
| த. பெ./க.பெ. | அத்தியான் | சாதி | |
| கிராமம் | மொடையூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 59 |

**பி.சா.1**

**குறுக்கு விசாரணை**

I. நீங்கள் ஆலம்பூண்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தீர்கள் என்றால் சரிதான். தற்போது மலையனூர் தாலுக்காவில் உள்ள வடவெட்டி கிராமத்தில் பணிபுரிந்து வருகிறேன். எந்த ஆண்டு கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தீர்கள் என்றால் 2015 ம் ஆண்டு பணியில் சேர்ந்தேன். அதற்கு முன்பு கிராம உதவியாளராக இருந்தேன். எப்பொழுது பணியில் சேர்ந்தீர்கள் என்றால் 1987 ல் பணியில் சேர்ந்தேன். நான் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றேன். உங்களிடம் மக்கள் அறிவுரை கேட்டால் அறிவுரை கூறிவீர்களா என்றால் அறிவுரை கூறுவதுண்டு . எது சரி , எது சரியல்ல, எது செய்யலாம் , எது செய்ய கூடாது என தெளிவு படுத்துவீர்கள் என்றால் சரிதான். அந்த அளவிற்கு உங்களுக்கு அனுபவமும், பக்குவமும் உள்ளது என்றால் சரிதான். ஆலம்பூண்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த சமயத்தில் தான் உங்களுக்கும், வாதிக்கும் பழக்கம் என்றால் சரிதான். அந்த பழக்கத்தின் அடிப்படையில் தான் வாதியிடம் நீங்கள் கடன் பெற்றீர்கள் என்றால் சரிதான். அந்த கடனிற்காக தான்நீங்கள் புரோநோட்டு எழுதிக்கொடுத்துள்ளீர்கள் என்றால் 30.11.2022 ல் புரோநோட்டு எழுதிக்கொடுத்தேன்.

II. 30.11.2022 ல் வாதிக்கு புரோநோட்டு எழுதிக்கொடுத்ததாக கூறும் சங்கதிகளை உங்களது முதன்மை வாக்குமூலத்திலும் , எதிர்வழக்குரையிலும் கூறவில்லை என்றால் சரிதான். 30.11.2022 ல் புரோநோட்டு எழுதிக்கொடுத்தது உண்மையாக இருந்திருந்தால் முதன்மை வாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் கூறியிருப்பீர்கள் என்றால் சரியல்ல. வாக்குமூலத்தில் வெங்கடேசன் புரோநோட்டு எழுதிக்கொடுத்த சமயத்தில் அங்கு இல்லை

என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி வெங்கடேசனை வாதி தரப்பில் 2 வது சாட்சியாக விசாரித்து உங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 18.11.2020 ல் வாதியிடம் இருந்து நீங்கள் கடன் வாங்கியபோது வெங்கடேசன், ஏழுமலை ஆகியோர் இருந்தார்கள் என்றால் ஏழுமலை இருந்தார், வெங்கடேசன் இல்லை. நீங்கள் இந்த கடனை வாங்கிய பிறகு வாதி உங்களிடம் பலமுறை அசல் மற்றும் வட்டியை கேட்டார் என்றால் கேட்டார். நீங்கள் அசலும், வட்டியும் செலுத்ததால் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் வாதி தனிகாசலம் என்பவர் என்னை நேரில் அழைத்து வரசொன்னதாக கூறினார். வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் எனக்கு வரவில்லை. சௌமியா என்ற வழக்கறிஞர் , 29.04.2022 ல் வழக்கறிஞர் அறிவிப்பு உங்களுக்கு அனுப்பிள்ளார் என்றால் இல்லை. நீங்கள் அறிவிப்பு பெற்றுக்கொண்டு வழக்கிற்காக பொய் கூறிகீறீர்கள் என்றால் சரியல்ல.

III. உங்கள் வாக்குமூலத்தில் வாதியிடம் ரூ.50 ஆயிரம் முதலில் கடன் கேட்டு இருந்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். கடன் பெற்றதற்கு சிறு சிறுதாக வட்டி செலுத்தி வந்ததாக குறிப்பீட்டுள்ளர்கள் அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் தாக்கல் செய்யவில்லை . வட்டி கொடுத்த போது ஏழுமலை, வெங்கடேசன் ஆகியோரை அழைத்து சென்றீரூப்பீர்கள் . வட்டி செலுத்தியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. வெற்று தாளில் கையெழுத்து போட்டதாக பொய் கூறுகீறீர்கள் என்றால் சரியல்ல. வாதியிடம் வாங்கிய ரூ.2 லட்சமும் , அதற்கும் வட்டியும் சேர்த்து தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.